# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ce. P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூச] பாற்பபணம்:- நந்தன வருஷ மாசி மீ ௩௦ உ வெள்ளிக்கிழமை (13 March. 1953) [இல - கூக]


# கலை உணர்ச்சியிற் கருத்தொருமித்தல்

## தனிமை என்னும் நுண்பொருள்

இவ்வுலகம் பல நாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அந்நாடுகள் ஒவ்வொன்றும் அவை இருக்கின்ற நிலையில், முன்னேற வேண்டும் என, அவ்வந்நாட்டி லுள்ளவர்கள் கருதுவார்கள் கருதுகின்றனர். அந்நாட்டில் பலவகைத் தொழில்கள், கலைகள், அரசியல் ஆகிய இவைகள் முன்னேறினால் அந்நாடு முன்னேறி விட்டதென்றே சொல்லலாம். அதில் ஐயம்திரிபறக் கொள்ளற்கு இடமுண்டு. அவைகளில் ஈடுபட்டோர் ஒவ்வொருவரும், தாம செயயவேண்டியதை உள்ளத்தில் சிந்தனை செய்ய வேண்டும். அத்தகைய சிந்தனையைச்செலுத்துவதற்கு உகந்த இடம் தனிமைதான. அதைப்பற்றிய விளக்கமே இக் கட்டுரை.

தனிமை என்பது என்ன என்பதையறியமுதற்படி செலவோம. பிறரின் கூட்டுறவு இன்றி, தன்னைச் சுற்றியிருக்கும் உயிருள்ள பொருளையும், உயிரில்லாப் பொருளையும் மறந்து, அருங்கலைகளுள் ஒன்றைப்பற்றித் தன் உள்ளத்தோடு ஒன்றுபட்டிருக்கும் நிலைமை தனிமை. இது ஒரு நுண்பொருள (Abstrct) இனி, தனிமை எத்தகைய பயனை யார் யாருக்கு எவ் வம் முறையில் பலனளிக்கும் என்பதைக் காண்பாம்.

முதலில் விஞ்ஞானிகளை எடுத்துக்கொள்வோம். விஞ்ஞானிகள் தங்கள் சோதனைக் கருவிகளுடன், இரவு பகலாகத் தனித்து ஆராய்ச்சி செய்யத் தலைப்படுவார்கள. இவர்கள யாவரும் தனிமையில் உள்ளத்தைச் செலுத்தி ஒவ்வொன்றையும் நுருகி ஆய்ந்து, புதுப்புதுக் கருவிகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர். தனிமைதான அவர்கட்கு அத்தகைய சக்தியை அளிக்கிறது. மேரிகயூரி, ப்யூரிகயூரி (Mary Ouree, Piere Ouiree) என்னும் விஞ்ஞானிகள் தனிமையிலதான தங்கள் வெற்றியைக் கண்டு நோபல் பரிசைப் பெற்றனா. ஸர். ஐஸக்நியூடன் (Sir Isaac Newton) தனிமையை விரும்புபவர் என்பதை அவரது சரித்திரம் கூறுகின்றது. அவ்வாறு தனிமையை விரும்பினதால் தான் சிறு வயதிலேயே சூரிய கடிகை (Sundial) காற்றுப் பொறி (Wind mill) இவைகளைச் செய்தார். பூமிக்கு ஆகர்ஷண சக்தி (Force of qravity) இருக்கிறது என்பதைக கண்டுபிடித்ததும் மரத்தின கீழ் தனிமையாக இருந்து சிந்தனை செய்ததால்தான. சர் வில்லியம் ராண்ருன் என்பவரும் எக்ஸ்ரேயைக் கண்டுபிடித்தார், தனிமையில் ஆராய்ச்சி செய்து. இன்று இதன் உதவியால் அயல் நாட்டில் மட்டுமல்ல • நம நாட்டிலும் ஒவ்வொரு பெரிய மருத்துவசாலைகளிலும் பல நோயாளிகளை துன்பங்களைப் போக்க முற்படுகின்றனர். "தாவரங்களும் மனிதர்களைப்போல் உயிர்வாழ்கின்றன; மனிதர் எவ்வாறு துன்பமடைகின்றார்களோ அதுபோன்று தாவரங்கள் அவைகளின் உறுப்புக்களாகிய செடி கொடிகளை அறுக்குங் காலத்துக் கண்ணீர் விடுகின்றன." என்று ஸர் ஜகதீஸ் சந்திரபோஸ் தனிமையில் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்தார். தற்காலத்திலிருக்கும் ஸர். ஸி. வி. இராமன் என்பவர்கூட, தான் படிக்கும் காலத்திலிருந்தே தான செய்யும் விஞ்ஞான

— தொண்டன் —

ஆராய்ச்சிகளைத் தனிமையில் செய்துதான் வெற்றிகண்டார். அவ்வாறு தனிமையில் ஆராய்ச்சி செய்ததன் பயனாக நோபல் பரிசையும் பெறறுர். சிறு வயதிலேயே மேனுட்டார் புகழையும் பெற்றுர். இவ்வாறாக விஞ்ஞானிகள் தாங்கள் எடுத்துக்கொண்ட முயறசியால் வெறறி பெற்றனர் என்றுல், அவர்கள் தனிமையில் நிலைத்திருந்தார்கள் என்பதைக் காரணமாகச் சொல்லலாம்.

ஓவியம் வரைதலும், சிற்பம் பொறித்தலும எளிய செயல்கள் அல்ல. பல்லவகால ஓவியச்சிற்பங்கள் பல நூற்றுண்டுகளுக்கு முற்பட்டவை. ஆயினும இன்று செய்தாற்போன்று காட்சியளிப்பவை எனின் இவற்றிலமைந்துள்ள வேலைத்திறனை என்னவென்றுரைப்பது. மாமலைபுரத்தில அருச்சுனன் தவநிலை கட்டும் சிற்பம், எருமைத்தலை அசுரனும காளியும போரிடும சிறபம இவைகள் மிகச் சிறந்து விளங்குகின்றன. இத்தகைய சிற்பங்களைச் செதுக்க வேண்டுமாயின, அவன் தனிமையில் உள்ளத்தைச் செலுத்தி சிற்பம்போன்ற உருவைத தன் மனதில சிந்திக்கிறுன், பின் செதுக்குகிறுன். நரைத்த மயிர்—ஒட்டிய கன்னம், உள்ளொடுங்கிய கண், துன்பச்சாயல படர்ந்தமுகம், எலும்புக்கூடு போன்ற உடலுமாக வாருன ஒரு ஓவியத்தை... வேண்டும். ஓவியக்காரன ... அறிவ்ீதாம. தனிமையை விரும்பி உள்ளத்தைச் செலுத்தி இதேபோன்ற உருவை மனதில் சித்திரிக்கிறுன். அவ்வாறு சித்திரிகசச் சித்தரிக்க, அவ்வுரு பல திறங்களால். தீட்டப்பெற்ற ஓவியமாகிறது.

எழுத்தாளனையும், கவிஞனையும் எடுத்துக் கொள்வோம. இவ்விருவரும் நாட்டின் கண் போன்றுர். எழுத்தாளன் தம் சிந்தனையில் எறபட்டவைகளை எழுத்திற் பொறிக்கின்றுன. கவிஞன் கவிதையில காட்டுகிறுன். இவ்விருவர்களுக்கும் கற்பனை அவசியம் தேவை. அத்தகைய கற்பனையைத் தனிமையில்தான பெறுகிறுர்கள். சிர்கெட்டுக் கிடக்கும் நாட்டைச் சிறப்புறச் செய்ய வேண்டும் என்று துடிதுடிக்கும் அரசியல் வாதிகள், தங்கள் சமுதாயத்தின் இறந்த கால நிலையையும், தறபோதைய நிலையையும் எதிர்கால நிலையையும உதமதசித்து, சிந்தனைசெய்து திட்டம் தீட்ட உதவும் காலமும் இடமும், தனிமைதான்.

இல்லற வாழ்வை வெறுத்துக் காட்டிற் புகுந்து கனியையுண்டு, இறைவனைப் பற்றிய நினைவு கொண்டோராய், அங்கிருந்ததும தனிமையை விருபியேயாம். இவ்வாறே கௌதம புத்தரும், தன் இல்லற வாழ்வையும், அரச போகங்களையும் துறந்து, தனியே சென்று காட்டில் தனிமையில் தவங்கிடந்தார், அதன் பயனாகதான் பல ஆண்டுகளுக்குப் பின், ஞானோதயம் பெற்றுர். இவ்வாறே ஒவ்வொரு துறவியும் தனிமையில்தான் இறைவனைக் கண்டிருக்கின்றனர்.

இத்துணை கூறியதாற்றுல், "தனிமையில் புதுப்புதுப் பொருள்களைக் கண்டு பிடிக்க முடியும்" தூய சிந்தனைகள் எழும்புகின்றன; கற்பனைத்திறன் பெருக்கெடுத்தோடு... ... என்பது ... அறிஞ்தாம.

புற்றில்வா ளரவுமஞ்சேன் பொய்யர்தம் மெய்யு மஞ்சேன்....!

திருச்சிற்றம்பலம்.

புற்றில்வா ளரவுமஞ்சேன் பெய்யர்தம் மெய்யு மஞ்சேன்
கற்றைவார் சடையெம் மண்ணல கண்ணுதல் பாத நண்ணி
மற்றமோர் தெய்வந்தன்னை யுண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலாத வரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே.

திருச்சிற்றம்பலம்.

# பான் பற்றுக் குறையப் பிறவிப் பிணி கூடும்!

## இறை அடியை இறைஞ்சி இன்பம் பெறுக!!

இவ்வடியின் மூல புருஷர் சுந்தாமூர்த்தி சுவாமிகளது சரித்திரத்திலேயே இவ்வடியின பொருள் மலிந்து பொலிந்திருப்பதை நாம் கண்ணூரக் காணலாம. கைலயங்கிரியில் ஆலாலசுந்தரர் என்னும் திருநாமத்தோடு தலைவராகிய சிவபெருமானுக்குத் தொண்டாற்

**அவைவச்சிவனடியார் வரைவது**

றும்பேறுபெற்றிருந்த சுவாமிகள் நந்தனவனத்தில் பூக்கொய்யுமாறு சென்றுர். அவ்விடத்து உமாதேவியாருக்கு பூக்கொய்யுமாறு வந்த அவருடைய சேடியாராம் அநிந்திதை கமலினி என்னும் பெண்மணிகளின்மீது விருபம் சென்ற காரணத்தால் தலைவராகிய சிவபெருமானிடத்திருந்த பறறச்சிறிது குறைந்தது. அக்காரணத்தால் அக்கணமே அவர பிறவிக்கு விதை இட்டுவிட்டார். அவருடைய பற்றுக்கிடமாகி அவ்விடத்து வந்த இரு பெண்மணிகள் இருவரது பற்றும் அவர்பற்றுக்கிடமாகிய தன்மையால் அவர்களும் பிறவிக்கடலிற தள்ளப்பட்டார்கள். பிராரத்துவத்தின் விளைவாக அவ்வாறுநிகழ்ந்ததேனும உடனே தாம் இதுகாறும் பிரியாது பற்றி உறுதுணையெனப் பிடித்திருந்த தலைவராகிய சிவபெருமானின் பாதார விந்தங்களின்கண்ணே யுள்ள பற்று மிகுதியினல் தங்கள் தவறை உணர்ந்து "புழுவாய்ப் பிறக்கினும புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவ திருக்க வரம் தரல்வேண்டும" என்னும் அப்பர் சுவாமிகளின் வாக்குக்கிலக்கியமாகி அவரது பாதங்களே தன்னைக்காக்கும என்னும நம்பிக்கை மிகுதியால் தாங்கள் பிறவிப் பெருங் குழியில் வீழ்ந்து மயங்காது தம்மை இரட்சிககவேண்டும என்று இரந்தனர். கருணைசமுத்திரம் அதற்கும் இடமளித்தது.

எத்துணைத் தகுதி வாய்ந்த ஆன்மாவாயினும உடம்போடு கூடிப் பிறவியெடுத்த விடத்து மயங்கித் தான் ஏன் பிறந்தேன்? இப்பிறவியினின்றும் நீங்குதற்கு வழியாது என்பதைச் சிறிதேனும் உணராது தன் மனதுக்கு விடயமான நுகர்ச்சிகளிற் சிக்கி ஆளுதல் கண்கூடு. அதுபோலவே திருமுனைப்பாடி நாட்டிலே அந்தணர் குலத்தில் பிறந்து சடையனார் மனைவி... அரசனின் மாளிகையில வளர்த நம்பியாரூரர் தன் பிறவிக்குக் காரணமாயிருந்த இரு பெண்களும் தனக்குப் பெண்களாகும் நோக்கத்துடன் பூமியிற் பிறந்திருக்கவும் அதை மறந்து புத்தூர் சடங்கவி சிவாசாரியருடைய கன்னிகையை மணக்க இசைந்தார். கலியாண மண்டபத்தில திருமணக்கோலத்தோடு நிற்கின்ற அவரை, அவர் கேட்டுக்கொண்டபடி தடுத்தாட்கொள்ளத் தலைவராகிய சிவபெருமான் திருவுளங் கொண்டார். உண்மையில் தனக்கு அடியவன நம்பியாரூரனென்பதைச் சபையில் நிரூபணம் செய்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

### தமிழ் மொழியே முஸ்லிம்களின் தாய்மொழி

இலங்கையின் தேசிய மொழி என்னும் பொருள்பற்றி அக்கரைப்பற்றில் நடந்த கூட்டமொன்றில் ஜனுப் M. M. சாலி அவர்கள் 'முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ் என்பதில் விவாதத்துக்கோ விதண்டாவாதத்துக்கோ இடமில்லை இடமிருக்கவும் முடியாது" என்று பெருமையுடன் கூறினர்.

### வைத்தீஸ்வரசுவாமிகோயில் மகோற்சவ விபரம்

பங்குனிமீ ௫உ 18-3-53 புதன் கிழமை பகல் முதல் ஐந்து காலம் சமயாசாரியர் உறசவம்.

வியாழக் கிழமை இரவு கருணைகடாக்ஷி சமேத கல்யாண சுந்தரர் எழுந்தருளி காக்ஷி கொடுத்தல்.

வெள்ளிக்கிழமை இரவு யாகாரம்பமும் பஞ்சமூர்த்திகளோடு சந்திரசேகரப்பட்டமும்

சனிக்கிழமை இரவு பூதவாகனம்

ஞாயிற்றுக்கிழமை இரவு யானை வாகனம்

திங்கட்கிழமை இரவு அம்சவாகனம்

செவ்வாய்க்கிழமை இரவு நாக வாகனம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஞூ மாசி மீ ௬௨ வெள்ளிக்கிழமை

## தெய்வத் தொண்டு

—0—

யாழ்நாடதனை ஆட்கொளுங்காலம் ஆனைதன்ன வண்ணை வைத்தியேசுவர சுவாமி கோவில் முன்னைப் பொலிவுடன் விளங்க இறைவன் திருவருட் சம்மதம திகழுகின்றது.

திருவேடங்காணுஞ் சிறப்பைச்

………சங்கரன்றன் கோயில்
தலம் அலகிட் டிலகுதிரு
மெழுக்குச் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந்
தாமாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப்
புகழ்ந்து பாடித்
தீதில் திரு விளக்கிட்டுத்
திருநந்த வனமும்
செய்துதிரு வேடங்கண்
டால் அடியேன் செய்வதி
யாதுபணி யீரென்று
பணிந்தவர் தம்பணியும்
இயற்றுவதிச்சரியைசெய்வோர்
ஈசனுல கிருப்பர்

என்று சைவ மார்க்கஞ் சொன்ன திரு அருணந்தி சிவாசாரியார் சித்திரித்திருக்கின்றார்.

பத்தியினுல அருச்சித்துப்
பாவிப் போற்றிப்
பரிவினெடும் எரியல்
வருகாரியமும் பண்ணல்

நின்மலன்றன் அருகிருக்கும் நிலைமையை அளிக்கும் என்றார் சிவாசாரியார்.

ஆக்கையாற் பயன் பெறிற் பூக்கையா லட்டிப் போற்றி வலம்வர அரன் கோயில் வேண்டும். கறைக்கண்டனுறை கோயிலின் கோலக் கோபுரங்கள ஓங்கினலன்றோ மக்கள் ஆலயஞ் சூழ்ந்து தங்கள் பாதங்களாற பயனுடையராவர்.

வேத ஓசையும்
வீணையின் ஓசையும்
சோத வானவர்
தோத்திர ஓசையும்

தமிழ்நாடெங்கும் கிளர்வுற்றிடச் சைவத் தொண்டர்கள் நற்பணிசெய்ய நல்ல அமையம் வந்துவிட்டது. சைவத் துறை விளங்க வேண்டிய காலம் ஏற்பட்டுவிட்டது. என்னை? மன்னுமெங் கொள்கையன்றி மற்றிலை கடவுள் இன்றேயென்னும் பொதுவுடைமையினர் விளைவிக்கும் தீங்கினுல் என்க!

அரன் கோயில் எங்கும் ஆறுகாலமும் திருவேடங் காணக்கூடியதாயிருத்தல் வேண்டும்! இறையடி மறவாத் திருத் தொண்டர் புனிதப் பேரவை விதிமுறை உலகில் விளங்க வேண்டும், பிறவிப் பெருங் கடல் நீந்த சிவ நாமம் என்னும் நற்புணை பிடித்தல் வேண்டும். இன்னும்

மெய்ந்நீறு மிக்க சாதனவேடமுங்
கண்டாற் றரிப்பிலாது சென்றே
திருவடி வணங்கும் உள்ளத

துணர்ச்சி உண்டாதல வேண்டும்.

இத்திருத் தொண்டு செய்யும சங்கங்களே சங்கங்கள், சைவப் பணியாற்றும் கழகங்களே கழகங்கள், சிவநெறிபரப்பும் சிலர்களே சிலர்கள்.

இக்கருத்தைப் பெரியார் ஸேர். கந்தையா வைத்தியநாதன், வைத்தியேசுவரன கோவிற் சங்காபிடேகப் பெருநாளன்று சமயக கல்வியின் அத்தியாவசியகத்தை எடுத்துக்காட்டும பொழுது அழுத்தந் திருத்தமாக அழகுபெற விளக்கிப் பேசினார்.

இவ்வாறு யார் யார் தெய்வத் தொண்டு புரி கின்றார்கள்?

தொடர் கதை

# எவ்விதமாயினும் அழிவில்லாத வாழ்க்கையை யான் பெற முடியாதா?

## ★ நீரர மங்கையர் ★

—9—

"அப்படியானுல் யான் ஒரு காலைக்கு இறந்து ஒரு சிறு நுரையாய்த் தண்ணீரிலே மிதக்க வேண்டி வருமோ? இப்படி ஆகுமபொழுது அலையின் இனிய ஒலியைக் கேட்டும் அழகிய பூக்களைப்பார்த்தும் மகிழுதல் ஒழிந்துவிடுமே. அடபோது சூரியனது ஒளியைத்தானும காண முடியாதே? இது என்ன? எவ்விதமபினும அழிவில்லாத உயிரை யான் பெற முடியாதா?" இவ்வாறு அதிக கவலையுடன் பாட்டியை வினவினள்.

அதற்குப் பாட்டி கூறியதாவது: "...... முடியாது, முடியாது. ஆனுல் அதற்கு ஒரு வழிதான் உண்டு. அது எமமாற செய்ய முடியாது. அது எப்படியானுல நிலவுல கிலைக்கின்றனர். அவர் அறிவில் மிகவும் குறைந்தவர். தம்மை நிறுத்திப் பிடிப்பதற்காக இரண்டு முட்டுக்கட்டை வேணுமாம். அவற்றைக் "கால்" எனப் பெயரிட்டுக் கொண்டு அவற்றைப்பற்றித் தமக்குள்ளே பெருமை பாராட்டிக் கொள்ளுவர்."....

இவ்வாறு பாட்டி கூறி முடிந்தவுடன் அச் சிறுமி தனது மீன்வாலைப் பார்த்துப் பார்த்துத் துயரடைந்தவளாய்ப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள்.

அவள் மன நிலையை அறிந்த பாட்டி, "முந்நூறு ஆண்டு யாம் உயிரோடு வாழ முடியும். அதே போதாதோ? அதை எண்ணியாம் களிப்படைய வேண்டாமோ? உனக்குத் துயர் வேண்டாம். விட்டு விடு. திற்க, இன்று எம் அர

கலாநிதி. க. கணபதிப்பிள்ளை அவர்கள்
இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் ஆக்கியது.

கத்து ஆண்மகன் ஒருவன்... உன்னைக் காதலிக்க வேண்டும்! தனது தந்தை தாயினும் மேலாக உன்னை நேசிக்க வேண்டும்!! தனது உள்ளம் முழுவதையும் உனக்கே கொடுத்து — உன் கையைத தன் கையாற் பற்றி — இம்மைக்கும மறுமைக்கும் உன்னையன்றி வேறொருவரையும் காதலிப்பதில்லை!!! என்று சொல்லிச் சத்தியம் செய்து தருவானேயானுல் — அவனுடைய உயிர் உன்னிடத்து வந்து தங்கும். அவவாறு நிகழுமானுல் அவன் அடையப் போகும் பேரின்பத்தில் நீயும் பங்குபற்றுவாய் ஆனுல் ஒன்று. இப்படியெல்லாம் ஒருபோதும் நிகழாது. ஏனெனில் நீர்-வாசிகளாகிய யாம் எமது மீன் வால் எமக்கு அழகு என எண்ணுகிறோம. நிலவுலகிலுள்ளாரோ இதை மிக அழகற்றதென

மனேயில், பெரிய கொண்டாட்டம் ஒன்று நடக்கப போகின்றது அதற்கு நீ அழகாய் உடுத்து அலங்கரித்து ஆயத்தமாய் இரு". என்று கூறி அவளை அனுப்பினள்.

இதைப் போன்ற ஓர் அழகிய கொண்டாட்டம் நிலவுலகத்தில எக்காலமும நடந்ததில்லை. கடலரசன மாளிகையின் நடுப் புறத்தில் ஒரு வனப்புடைய நடனசாலை இருந்தது. அதன் சுவர் பளிங்கினுல் ஆயவை. அச்சாலையின் இரு பக்கங்களினும் நூற்றுக் கணக்கான முத்துச் சிப்பிகள் வரிசை வரிசையாய்ப் பதித்திருந்தன. இவைகளுட் சில பச்சை. சில சிவப்பு. இவற்றிலிருந்து ஒரு வகை நீல ஒளி எழுந்து சாலை முழுவதையும் துலங்கச் செய்தது. அன்றியும அவ்வொளி அதன் பளிங்குச் சுவருக்கூடாகச்சென்று, கடலிலும பரந்து விளங்கியது சுவருக்கருகிற பெருமீன்களும் சிறுமீன்களும நீந்தி விளையாடித் திரிவதை அவ் வெளிச்சத்திற் காணலாம். அவ் வெளிச்சத்தினுல சிலவற்றின் செதிள் நீலமாகவும சிலவற்றின் செதிள பொன்னிறமாகவும் சிலவற்றின் செதிள் வெள்ளிபோலவும மினுமினுத்தன. அச் சாலைக்கூடாக ஒரு நீரோடை பாயந்துகொண்டிருந்தது. அதில நீர் வாழ் ஆடவரும் அரிவையரும் இனிய பாட்டுகளைப் பாடி நடமாடினர் அவரைப்போல இனிய குரலுள்ளவர் இந் நிலவுலகத்தில் யாவரும் இலர், அவர் யாவரினும் யாப பேசும் நீரர மகளே மிக இனிமையாகப் பாடினுள். அவள் பாடி முடிந்ததும, உடனே அங்கிருந்தோர் அவள் பாட்டு மிகத்திறம் என்பதற் கறிகுறியாகக் கை தட்டி ஆர்ப்பரித்தனர்! இத [illegible] கத்திலைவள நீருலகத்திலா

வது தன்னைப்போல் இனிய ஓசையுள்ளவர் எவருமிலரென்று நினைத்துப் பெருமிதம கொண்டாள். எனினுஞ் சடுதியில் அவள் உள்ளம அங்கிருந்து மேலேயுள்ள நிலவுலகத்துக்கு ஓடியது. ஏனெனில் இவ்வளவு ஆர்ப்பாட்டத்துள்ளும பெருமகிழ்ச்சிபூளும்கூட அங்கே தான் கண்ட அரசிளங் குமரனை அவளால் மறக்க முடியவில்லை. அன்றியும அவனுக்குள்ளது போல் அழிவற்றவுயிர் தனக்கு இல்லை என்ற துயரையும் மறக்கமுடியவில்லை. இக்காரணத்தால் யாவரும் காணுதவண்ணம் மாளிகைக்கு வெளியே மெல்ல நழுவிப் போய்த் தனது தோட்டத்தையடைந்து அங்கு ஒரு பக்கத்தில மிகுந்த துயரோடு தனியே இருந்தாள். மாளிகைக்குள்ளேயே கொண்டாட்டம் பெரிய ஆரவாரங்களோடு நடந்துகொண்டிருந்தது ……
………………………… (வளரும்)

அணிந்துரை அரங்கம்

## விஜய வருஷ கலைமகள் வாக்கிய பஞ்சாங்கம்

விஜய வருஷ கலைமகள் வாக்கிய பஞ்சாங்கம், திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் இருபதாவது மஹா சந்நிதானமாக அருளாட்சி செய்த ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண பரமாச்சாரிய சுவாமி அவர்களின் அங்கீகாரம் பெற்ற இட்டமொழிக் கிராம முன்சீப் திரு. சிவசூரியநாராயணபிள்ளை அவர்களால் கணிக்கப்பெற்று வழக்கம்போல் அழகுற அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

பிரதி ஒன்றின் இலங்கை
விலை சதம் -/60 மாத்திரம்

பெறுமிடம் கலைமகள் கம்பெனி
124 செட்டியார் தெரு
கொழும்பு
(தபாற்பெட்டி 765)

எமது பார்வைக்கனுப்பிய பிரதிகள் அன்புடன் ஏற்கும்.

## சங்காபிஷேகமும் தண்டிகைத் திருவுலாவும்

வண்ணார்பண்ணை வாலாம்பிகா சமேத வைத்தியேசுவர சுவாமி கோயிலில், சம்புரோட்சண கும்பாபிடேகத்தின் பின்னர் தொடர்பாக 45 நாள் பகல் விசேட அபிடேகமும், இரவு விசேட உற்சவமும நடைபெற்று, பூர்த்தித் தினமாகிய சென்ற செவ்வாய்க்கிழமை ('0-3-53) யத்தியான சங்காபிடேகம், அன்னதானம் என்பனவும் சிறப்பாக நடைபெற்றன, அன்றிரவு அலங்கார தண்டிகையுற்சவம சிறந்த முறையில நடைபெற்றது. அன்று மாலை உள்நாட்டு மந்திரிசபை சிங்கள காரியதரிசியாகிய ஸேர். க. வைத்தியநாதனும், இலங்கைப் புகையிரதப் பகுதி திரு. க. இராமச்சந்திரனும் தேவாலயத்தின தொண்டைப் பெரிதும பாராட்டிப் பேசினார்கள்.

கும்பாபிடேகதினத்தொடக்கம வண்ணை பிரமஸ்ரீ C.S.S. மணி ஐயர் அவர்கள தொடர்பாகப பிரசங்கஞ்செய்துவரும் திருவிளையாடற புராணச் சரித்திரங்களில் தருமிக்குப பொற்கிழி அருளிய படலம் சங்கீத சகிதமாகப்பிரசங்கஞ்செய்தார்.

## ஏழாலையில் உபதபால் நிலையம்

சென்ற சனிக்கிழமை அமைச்சர் திரு. சு. நடேசன் அவர்கள் ஏழாலையில் ஓர் உபதபால் நிலையத்தைத் திறந்து வைத்தார்.

## கேகாலைப் பிரசாவுரிமை வழக்கு

கேகாலைப் பிரசாவுரிமை வழக்கு இந்தமாதம 16ந் திகதி ஆங்கிலேய ஆசனமன்றக் குழுவினர் ஆராய்வரென்று அறிய வருகின்றது.

## கொழும்பு தமிழ் இலக்கியச் சங்கத்தில்

# திருவள்ளுவர் திருநாள்

## "திருக்குறளைப் படித்து அதன் பொருளுணர்ந்து தெளிந்து வாழ்தல் அவசியம்"

"மனிதனுடைய வாழ்க்கையைச் செம்மைப் படுத்தும இரத்தினக் குவியல் தான் திருக்குறள். அதை ஒவ்வொருவரும் தினந்தோறும் படித்துப் பொருளுணர்ந்து தெளிந்து வாழ்தல் அவசியம்" என்று 8-3-53 ஞாயிற்றுக்கிழமை கொழும்பு விஸ்வகர்ம தமிழ் இலக்கியச் சங்கத்தில இலங்கை விஸ்வகர்ம சங்கத்தின் தலைவர் திரு. அ. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியார் அவர்கள் தமது தலைமைப் பேருரையில் குறிப்பிட்டார்.

"திருவள்ளுவர் வாழ்ந்த காலம் தமிழகத்தில் பிறமொழிக் கலப்பின்றி, தனித்தமிழ் இலக்கிய காலம்; கடைச்சங்கம் நிறுவிய காலம்; தமிழ் ஆய்ந்த பெரும் புலவர்கள் வாழ்ந்த காலம். அது மாத்திரமன்றி ஒன்றுக் கொன்று மாறுபட்ட சமயப்போர்களுக்கெல்லாம நிலைக்களனாகவிருந்தது தமிழ் நாடு. அக்காலத்திலதான திருவள்ளுவர் தோன்றினர். மக்கள் உய்வதற்கேற்ற ஓர் அரிய செல்வமாகிய திருக்குறளை இவர் இயற்றியருளினர். இத்தகைய பெரியாரை இன்று நாம் கொண்டாடுவதற்கு மிகவும் பெருமையடைகின்றோம்" என்று மேலும் கூறினர்.

தமிழ் மறைக் கழகச் செயலாளர் திரு. இ. சி. சோதிநாதன் அவர்களும, விவேகானந்த வித்தியாலய ஆசிரியர் திரு. வ. நடராசா அவர்களும விவேகானந்த வித்தியாலய ஆசிரியர். பண்டிதர். க. சிவகடாட்சம் அவர்களும் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றினர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ பரிபாலன சபை
## யாழ்ப்பாணம்

டி சபையினது ஒரு விசேஷ பொதுக் கூட்டம் நிகழும் பங்குனி மீ 9-ந் உ (22-3-53) ஞாயிற்றுக்கிழமை காலை 9½ மணிக்கு நீராவியடியிலுள்ள சபை நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

### விஷயம்

1. விபூதி தரித்தல் — தேவாரம்
2. சென்ற வருடாந்தக்கூட்ட வரலாறு வாசித்தல்.
3. பிரேரணைகள்:

(அ) "சபை பிரசுரிக்கும் இந்துசாதன தமிழ் அங்கிலப் பத்திரிகைகளில் நேரும் பண நஷ்டத்தைக் குறைப்பதற்காக இவற்றை 1—4—53 தொடக்கம் 6 பக்கம் கொண்ட சிறந்த வாரப் பத்திரிகைகளாகப் பிரசுரிக்க வேண்டுமெனவும், ஆங்கிலப் பத்திரிகையை "The Ceylon Hindu" என்ற பெயரோடு பிரசுரிக்கவேண்டுமெனவும், இப்பொதுக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(ஆ) "வருங்காலத்தில் இலங்கை மாணவருக்கு என்ன மொழியில் எப்படிக் கல்வியூட்ட வேண்டுமெனச் சபைஆலோசித்துச் சபையின் அபிப்பிராயத்தை அரசாங்கத்துக்கு அறிவிக்க வேண்டும்

(இ) இச்சபையின் பிரதிநிதிகள் உள்நாட்டு மந்திரியையும். தமிழ் மந்திரிகளையும் சந்தித்து அறநிலையப் பொருட் பாதுகாப்புச் சட்டத்தை விரைவில் அநுசரணைக்குக் கொண்டுவரும்படி கேட்கவேண்டுமெனத் தீர்மானிக்கின்றது"

4. வேறு விஷயம் 5 தேவாரம்.

யாழ்ப்பாணம்
11—3—53

அ. அருளம்பலம்
கௌரவ காரியதரிசி

குறிப்பு ☞ அங்கத்தவர் (1) தமது சந்தாவையும், (2) சபை ஆச்சிரம நாவலர் மண்டபக் கடன் நிவாரண நிதிக்குச் சேர்ந்த பணத்தையும் பணம் சேர்க்கத் தாம் பெற்ற காகிதத்தையும் கூட்டத்திற்கு முன் அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

**மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை.**

## ஆலயந் தொழுவது சாலவும் நன்று

"நமது மக்கள் நல்வாழ்வு வாழவேண்டுமேயானால் கோவில்கள் சிறப்புற நடைபெறுதல் வேண்டும். சமயத்தற்கு மாறான கொள்கைகள் பரவிவரும் இக்காலத்தில் ஆலய வழிபாடு மிகவும் அத்தியாவசியமாகும்"

Sir. க. வைத்தியநாதன்

## தேகவியோகம்

யாழ்: காரைநகர் ஸ்ரீவாத்ஸ்ய பண்டித பிரம்மஸ்ரீ ஷ. பஞ்சாக்ஷர குருக்கள் அவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை (8-3.53) இரவு தமது இல்லத்தில் தேகவியோகமாயினர். அன்னார் ஆரிய திராவிட மொழிகளில் பாண்டித்தியமும் வைதிக சைவசித்தாந்த அறிவில் முதிர்ச்சியும் பெற்ற சிவபூஜாதுரந்தரராய்ச் சிறந்த சிவாசாரியராக விளங்கியவர். மேலும் அவர் பயிற்றப்பட்ட முதலாந்தரம் உடையவராகவிருந்து, ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் பின்பு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் தலைமையாசிரியராகத் திறம்பட விளங்கி இளைப்பாறியவர். அவர் இயற்றிய தமிழ்நூல்களுள் பல சுவறமல இணைநாமலவண்பா வீரசத்தி விநாயகர் இரட்டைமணிமாலை என்பன மிகச்சிறந்தவை இப்பெரியார் 64ம் வயதில் தமது பூதவுடம்பை நீத்தமை வருத்தத்தக்கது. இவரது ஆன்மா சாந்தியடைவதாக.

இவருடைய அந்தியக் கிரியையில, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 5 பெற்றும்.

மனேஜர்.

M. 276 12—3—53

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

1942ம் ஆண்டின் 13ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் 233 K K S. ரோடு, பெ அரு. மு. முத்துச்சாமிசெட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்:

| நம்பர் | உறுதி | கொடுத்த ரூபா | ஊர் பெயர் நகை விபரம். |
|---|---|---|---|
| 2470 | 9-8-51 | 92 | மண்டதீவு எரம்பு இரத்தினலிங்கம் பொட்டு 1ம் சாஸ்வதி சேர்மானக் கல் வைத்த செடிவேலை செய்த பொட்டு 1 |
| 2497 | 11-8-51 | 21 | நல்லூர் சின்னத்தம்பி விஸ்வலிங்கம் கைச் சங்கிலி 1 |
| 2519 | ,, | 10 | நாச்சாவின்தோட்டம் குருநாதர் வைகரத்தினம் தொங்கட்டானுடன் இமி. வெள்ளைக்கல் காதுக்குச்சி சோடி 1 |
| 2566 | 13-8 51 | 30 | நீராவியடி சின்னத்தம்பி ஜோஷ்நடேசன் பழுது சில கல்லில்லாத இமி. கல். அக்ஷரக்கூடு 1 |
| 2601 | 15-8-51 | 30 | வண் மேற்கு ஓட்டுமடம் செல்லப்பா சின்னத்துரை தாலி 1 |
| 2640 | 17-8-51 | 103 | காவாந்துறை கிறிஸ்தோ மருசலீன் இயேசுநாதர் பொட்டு கோர்த்த சங்கிலி 1 |
| 2678 | 18.8 51 | 25 | சாவகச்சேரி கந்தையா இராமலிங்கம் இமி. கல். மோதிரம் 1 |
| 2695 | 20-8-51 | 80 | நாவாந்துறை அந்தோனிமுத்து சூசைப்பிள்ளை டைமன் சங்கிலி 1 |
| 2841 | 26-8-51 | 100 | சோனகதெரு பிச்சைகுளம் ரோடு சுல்தான் அபதுல்காதர் முகையதீன் சாகிபு பழுது முறிந்த சங்கிலி 1 |
| 2869 | 27-8-51 | 115 | கச்சேரியடி பண்டியதாழ்வு முத்தையா மயிலவாகனம் கம்பிவளையல காப்புசோடி 1 |
| 2837 | 28-8-51 | 110 | நாவாந்துறை கிறிஸ்தோ மருசலின் இமி வெள்ளைக்கல கொண்டைப்புரூச் 1ம ஷைகல் மோதிரம 1ம் இமி கல் மோதிரம் 1 |
| 2948 | 30-8-51 | 100 | கைலாசபிள்ளையார்கோவில் மேற்கு வீதி இளையதம்பி வேலுப்பிள்ளை பழுது அக்ஷரகூடு 1 |
| 980 | 1 9-51 | 5 | கச்சேரியடி சக்காலை மரிமுத்து சுப்பிரமணியம் சிறு ஆடுதன மோதிரம் 1 |
| 3058 | 4-9-51 | 45 | இணுவில் கிழக்கு வேலாயுதர் ஆறுமுகம் இமி கல் அக்ஷரகூடு 1 ம் ஷை நீலக்கல் மோதிரம் 1 |
| 3071 | ,, | 4 | ஓட்டுமடம் சின்னத்தம்பி மாணிக்கன் பழுது மட்டப்பொன் காட்டுக்கடுக்கன்சோடி 1 |
| 3135 | 8-9.51 | 165 | கந்தர்மடம் ரயில்வே ரோடு நாகமணி நடராசா சங்கிலி 1 |
| 3137 | ,, | 50 | நவாலி வடக்கு சுப்பையா இராசையா சபபி வளையல பிள்ளைக்காப்பு சோடி 1 |
| 3210 | 11-9-51 | 85 | கீர்வேலி வடக்கு மயில்வாகனம வேலுப்பிள்ளை சம்பிக் காப்பு சோடி 1 |
| 3319 | 18-9 51 | 17 | நாயன்மார்கட்டு மாணிக்கம் நடராசா திருகில்லாத இமி வெள்ளைக்கல் காதுக்குச்சி சோடி 1ம் திருகில்லாத ஷைகல் தொங்கட்டானுடன் காதுக்குச்சி சோடி 1 |
| 3334 | 19 9-51 | 40 | மானிப்பாய் வடக்கு பொன்னையா அருமைத்துரை தாலி 1ம் குண்டு 1ம் திருகில்லாத இமி வெள்ளைக்கல் காதுக்குச்சி 2 |
| 3347 | ,, | 70 | நல்லூர் பொன்னையா இராமசாமி தாலி1ம் இமி வெள்ளை நீலம் கட்டிய தொஙகட்டான சோடி 1 |
| 3435 | 24-9-51 | 15 | கந்தர்மடம் ரயில்வேரோடு நாகமணி நடராசா இமி வெள்ளை நீலம் கட்டிய தொங்கட்டான் சோடி 1 |
| 3703 | 9-10-51 | 25 | அராலி கிழக்கு கார்த்திகேச சுப்பிரமணியம் இமிடேஷன் கல் மோதிரம் 1 |
| 3727 | 10-10-51 | 21 | கொக்குவில் மேற்கு ஐயாத்துரை ராசகோபால் இமி. கல், மோதிரம் 1 |

விற்பனவு: நந்தன ஹூ பங்குனி மீ 22உ (4.4.53) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம மேற்படியார் கடையில் எடுபட்ட நகைகள் புறநீங்கலாக மீதி நகைகள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வண்ணார்பண்ணை,
11—3—53.

சி. பசுபதிச்செட்டியார்
வேந்தீஸமேளதர்.

M 275 13, 17—3—53,


# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இவ்வாரப் பலன்கள் 15—3—53——21—3—53

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

இது ஒரு தொந்தரவுள்ள வாரம் வரவு செலவு சமாளிப்பது வருத்தமாயிருக்கும். புது முயற்சிகளை கவனமாய்க் கையாள வேண்டும் சுகவீனத்துக்குமிடமுண்டு.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்த வாரம் நண்பர்மூலம் சில நன்மைகளைப் பெறக்கூடியதாயிருக்கும் தொடக்க இடுக்கண்களின் பின் சித்தியுண்டு. சிறிது காலத்துக்குச் செலவு திகரித்தபடியே யிருக்கும் வார இறுதியில் அவமானம விளைப்போரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

இது ஒரு சுப வாரம். இலகுவாய் நீர் விரும்பியவற்றுட் பலவற்றை யடையக்கூடியதாயிருக்கும பின்னா உதவும சில விசேட தீர்மானங்கள் சிறிது காலத்துள தீர்மானிக்க வேண்டும். தனலாபமும் நிச்சயம்.

**கடகராசி புனர்பூசம 4மபாதம பூசம் ஆயிலியம.**

இந்த வாரம் அதிகம் முயன்று வேலைசெய்ய வேண்டும். இவற்றவரால் இடைஞ்சலும் உண்டாகக்கூடும். புது முயற்சிகள் சிறிது காலத்துக்குப்பின போடவேண்டும். நல்ல காலம் எதிரே வருகின்றது.

**சிங்கராசி மகம், பூரம, உத்தரம், 1ம் பாதம்.**

இந்த வாரம் உழைக்கிற காசு முழுதும் செலவாகும். வாரத்தின முதல் மூன்று நாட்களில இரகசியப் பகைவரால் இடைஞ்சலுக்கும மனச்சலனத்துக்குமிடமுண்டு உத்தியோகத தொந்தரவுக்கு மிடமுண்டு. ஆனல் குற்றமின்றி வெளிவருவீர்.

**கன்னிராசி உத்திரம் 2 3,4ம பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

அதிகம் நிலைகுலைக்கும் வாரம. சில காரியங்களிற செய்வதறியாது தயங்குவீர். செவ்வாய் மாலை, புதன், வியாழன் எல்லாவற்றிலுங் கூடாத காலம். சுகவீனத்துக்குமிடமுண்டு. அதிகம ஆலோசிக்க வேண்டாம். நல்ல காலம் முன்னுக்கு வருகின்றது.

**துலாம் சித்திரை 3.4ம பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம பாதம.**

இந்த வாரம் குடும்பத்தொந்தரவுக்கிடமுண்டு. குடும்பத்தவரிடையில அதிக பிழை எண்ணங்களுண்டாகும. வார இறுதியில அவமானம் நிலைகுலைக்கக்கூடும். ஆனல் பேராபத்துகளுக்கிடமில்லை.

**விருட்சிகராசி விசாகம 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

இரகசியப் பகைவரைப்பற்றி இந்த வாரம் எச்சரிக்கையாயிருக்கவும. மனச் சலனத்துக்கும பண இடைஞ்சலுக்குமிடமுண்டு. புது முயற்சிகளைக் கவனமாய்க் ...

... வும் வார இறுதியில் குடும்பத் தடுமாற்றங்களுக்கிடமுண்டு.

**தனுராசி மூலம்பூராடம் உத்தராடம 1 ம் பாதம்.**

இந்த வாரம் சுகவீனத்துக்கிடமுண்டு. சில சொந்தக் காரியங்களைப்பற்றிச் சலனப்படுவீர். வாரமுடிவில் அதிக செலவை விளைவிக்கும் பிள்ளைகளின் சுகமும் வார இறுதியிற் பாதிக்கப்படக்கூடும்.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம பாதம திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்த வாரம் உம்முடைய மாதாவழி இனத்தவர் குடும்பசமாதானத்தை அழிக்கக்கூடும். உத்தியோகத் துறையில் எல்லாம் நன்று. தனலாபமும நிச்சயம்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம, சதயம, பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

தொடக்க இடுக்கண்களின் பின் எடுத்த காரியம் சித்தியாகும். ஆனல் மனச்சமாதானமிராது வார இறுதியில் உத்தியோகத் தொந்தரவுக்கிடமுண்டு.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

சிறிது காலத்துக்குத் தேகசுகத்தைப்பற்றி விசேட கவனஞ் செலுத்த வேண்டும். விரைந்து சண்டைகள் தொடுப்பீர். உயர்தர உத்தியோகத்தருடன தொந்தரவுக்கிடமுண்டு. குடும்பத் தொந்தரவு [illegible]

# சிறந்த கொழுக்கி ஓடுகள்

பேசல் மிசன் கோட்டை மார்க் இரட்டைப் பிலி கொழுக்கி ஓடுகளே மற்றை எல்லா ஓடுகளிலும் சிறந்தவை. எப்படி மழை பெய்தாலும் கசிந்தொழுகமாட்டா. வெயில் மழைகளினுல் பங்கப்படாது நீடித்தகாலம் பாவிக்கக் கூடிய திண்மை உடையன!

கிடைக்குமிடம் :

வில்லியம் மேதர் சன்ஸ்,
சோல் ஏஜென்ஸ்,
யாழ்ப்பாணம்.

[M. 225. 23—24-4-53.]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## சரவணைக் கரிசனப் பிள்ளைகளின் கல்வி

"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி" என்றொரு பழமொழி உளது. கிறிஸ்தவர்களின் கருணையால் அவர்தம் பாடசாலைகளில் படித்து வந்த கரிசனச் சிறுவரைச் சைவப் பாடசாலையிற் சேர்ப்பதாக வாக்களித்துத் தைப்பூச நன்னாளில் சார்த்துச் சென்று வித்தியாரம்பம் செய்தனர், சீர்திருத்த வாதிகளான ஆசிரியர் சிலர். ஊரவர்களைக் கலந்து ஆலோசியாமல் இக்காரியத்தைச் செய்து, அவர்தம் சீற்றத்துக்கு ஆளாகி மனம் வருந்து, மன்னிப்புக் கோரிச் சில பிள்ளைகளை மீண்டும் சேர்த்தனர். அவர்களைச் சார்ந்துறச் செய்யவென்று கரிசனப் பிள்ளைகளை ஒரு வாரம் பாடசாலைக்கு வரவேண்டாமென்றனர். அந்தோ! அடுத்த வாரமும் பிறந்துவிட்டது இழி குலத்திற் பிறந்த தோஷத்தால் இருபதுக்கதிகமான சிறுவர்கள் கல்வி கற்க இடமின்றிப் பிடித்த கொம்பையும் விடுத்து கிறை சொமபரும் மூறியும் நிலையில் தத்தளிக்கின்றனர்.

அன்புவழியில் சீர்திருத்தம் செய்ய முயலும் சமயவாதிகளைச் சமூக சீர்திருத்தவாதிகள் நிந்தித்து ஐயோ அவர்களை இகழ்கதோமே என்று நைவர்.

இவர்களின் பலஹீனத்தைக் கண்டு, சந்தர்ப்பதலைப் பயன்படுத்திக்கொண்டு தம் பாடசாலையிலிருந்து விலகத்துணிந்தமைக்காகக் கிறிஸ்தவ ஆசிரியர் ஒருவர் கரிசனரை அடிக்கவும் முற்பட்டனராம். மத்தளத்தின் கதியை அடையாதிருக்க விரும்பிச் சைவக் கரிசனர் தம் பிள்ளைகளை வீட்டில் மறித்துவிட்டனர்.

### "சரவணை-வைரவன்"

இராவணன் வேலாயுதத்தைப் பிரயோகித்து வீபீடணனைக் கொல்லவர, இலக்குமணன் தன் மார்பில் வாங்கி அண்ணனின் ஆணையைக் காத்தார் என்று இலக்கியத்தில படித்து வாயூறும் நமமவரன்றோ தம வாழ்வில் தம்மை நம்பிவந்த ஆதரவற்ற விபீடணர்களை நட்டாற்றில கைவிடுகின்றனர். தம தோட்டவேலை முதலியவற்றுக்குக் கூலிதேடிச் சேரியை அடைவோர் தம்மிடம் அறிவுகோரிவந்த — தம்மால் இட்டுச் செல்லப்பட்ட — மாணவரைக் கைவிடுதல் ஆண்மையோ? அவர்களைப் பிற மதத்தாரின் ஏளனத்துக்கும் அடி உதைக்கும் ஆளாக்குவது தகுமோ?

உயர்குலத்தோர், கிலபுலப் படைத்தோர உணரவேண்டியது, ஒழிப்புற்ற இனம் இனியும் உதைக்கும் காலை அணைத்துக்கிடக்கமாட்டாது. இளைஞர் அயல் ஊர்களில் அயல் நாட்டு அரசியற்கொள்கைகளை வற்று வருகின்றனர். தம் இனத்தை ஜயபேரிகையுடன் புரட்சிப் பாதையில் வழிநடத்த முற்படுகின்றனர். அப்போது தம் பொருளாதாரத்தைத் தாங்கவும், சமயத்தை அழிக்கவும் முற்படும் காலாக்கினி வெள்ளத்தை எங்ஙனம தடுப்பரோ? சாதிப் போராட்டம் காலப்போக்கில வர்க்கப் போராட்டமாக மாறும். அப்போதுதான

## அறிவித்தல்

வீரகத்தி கணபதிப்பிள்ளை ஆகிய எனது 4712023 - ஆம் இலக்கப் புருடன்சல் இன்சியூரன்ஸ் கம்பெனி உறுதி தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர் அல்லது இதற்கு உரிமை கொண்டாடுபவர் இன்றிலிருந்து ஒரு மாதத்திற்குள் "புருடன்சல் இன்சியூரன்ஸ் கம்பனி, தபால் பெட்டி 45. கொழும்பு - 1." என்ற விலாசத்துக்கு அறிவிக்கவும்.

இங்ஙனம்,
வீர. கணபதிப்பிள்ளை
ஆசிரியன்

"முருகன் நிலயம்"
புலோலி தெற்கு
பருத்தித்துறை
1—3—53
M 274 13 17—3 - 53.


திறமான
## தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
## ரூஸிமார்க்ஓடுகள்
13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.


## பரன் பற்றுக் குறையப் பிறவிப்பிணி கூடும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

தார். வேறொன்றும் செய்ய வகையறியாது, தலைவராகிய சிவபெருமானும் பிராமணரைப் பின்பற்றிச் சென்ற அடிகளுக்குத் தலைவர் திருவருட்டுறை என்னும் ஸ்தலத்துட் புகுந்து மறைந்த அக்கணமே விஷயம புரிந்தது. தான் உய்ந்து கடைத்தேறினேன் என்று இன்ப மேலீட்டால் ஆடினார், பாடினார், தலைவராகிய சிவபெருமானிடத் திருந்து சிறிதே விலகிய பற்றுப் பிறவியைக் கொடுத்தது மீள அவரிடத்து வைத்த பற்று அப்பிறவியைக் கெடுத்தது.

இவ்விடத்தில் தன்னை அறிந்துகொண்ட சுவாமிகள் தலைவர் திருவருள்வழிநாடி அவர திருவடிப் பற்றைக் கடைப்பிடித்த காரணத்தால் அவர் விரும்பிய பெண்களுள் ஒருவராகிய பரவையாரை அவன் புலனுகர்ச்சிக்கு இலக்காக்கி ஆறத்துவாக்களின் கண்ணுட்கட்டுண்டு கிறகும் போகங்களை யெல்லாம பொசிப்பித்துத் தொலைக்கக் கருதிய தலைவர் அடியார்க்கெளியனுந் தன்மை விளங்கப் பரவையாரிடத்துத் தூதுவனாகவும் நடந்தருளினார். மேலும் தலைவராகிய சிவபெருமான் தனது தோழராய சுவாமிகளுக்கு அவர் விரும்பிய மற்றைய பெண்ணும் சங்கிலியாரையும் கொடுக்குமிடத்துத் தமது திருவிளையாட்டினாலே ஒரு வாக்குறுதியையும் பெற்றுக்கொண்டார். இந்த இடத்தில அவரது இரண்டாவது பரீட்சை நடந்தது. சங்கிலியாரைப் பிரிந்து திருவொற்றியூரை விட்டு அகலமாட்டேன் எனறு தலைவராகிய சிவபெருமான் மேல் ஆணைகூறிய அடிகளுக்குப் பரவையார்மேற் பற்று மேற்பட்டு அவ்வூரை விட்டு அகன்ற அக்கணமே அவர் கண்கள் மறைந்தன. மேலும் அவர்கள் வைத்த பற்றே கண்களைத் திறப்பிக்க உய்ந்து கடைத்தேறினர்.

ஆகவே தன்னையுடையானைத் தொடர்ந்து பற்றுந் தன்மையுடைய பற்று அறவே கடியப்பட வேண்டிய தொன்றல்ல, அதற்குச் சிறிதேனும் இடங்கொடுக்கின்றது அதுவாயிலாகத் துன்பமே பெருகுமென்பதும் நமது பிறவி நீங்குவதற்கு உறுதுணையாகிய உடம்பினகணையேயும் சிறிதேனும் பற்று இருக்கலாகாதென்பதும் அவ்வாறுகிய பற்றினைக் குறைத்துத் தலைவராகிய சிவபெருமானது பாதமே மனம் பாவித்து பிறந்த இப்பிறவியின் நீங்கி சிவோகம்பாவனையால் முத்தி யெய்தலே வழியென்பதும் நாம மனத்தில் இருத்த வேண்டியனவாம்.

"மற்றுந்தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல் உற்றார்க்குடம்பு மிகை"

— குறள்


## (Drivers) சாரதிகள் தேவை

இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள பாதைகளை யறிந்த, குறையற்ற நற்சாட்சிப் பத்திரங்களையுடைய சாரதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன அனுபவத்திற்கேற்ற சம்பளம். வட இலங்கை ஐக்கிய பிரயாணச் சபைக் காரியதரிசிக்கு (Secretary North Ceylon Co-operative Tourist Society Ltd. Tholpuram Chulipuram) தொல்புரம் சுளிபுரம் விண்ணப்பஞ்செய்யவும். தெரிவுசெய்யப்பெற்றோர் பொறுப்பேற்குமுன் ரூபா 200/= காசுப் பிணை கட்டவேண்டும். விண்ணப்பங்களுக்கு 25 - 3 - 53 கடைசி நாளாகும்.

M. 278 10, 13—3—53.



## மூலவியாதி
அறவே அகற்றப்பட வேண்டுமானல்

பழனி, சி. எம். சாமி,

## நாகபஸ்பம் | கருணைலேகியம்

... உபயோகியுங்கள் ...

- நாட்பட்டதானாலும் ஆப்ரேசனின்றிக் குணப்படுத்த இயலும்.
- மூலச் சூடு, மூல முளை, இரத்த மூலம், மல பந்தம், ஆசனத்துவாரத்தைச்சுற்றிலும் கொப்பளமுண்டாகுதல் முதலியன குணமாகின்றது.

| 24 வேளை பஸ்பம் புட்டி 1க்கு ரூ 5-0-0 | கருணைலேகியம் அரைசேர் புட்டி ரூ. 2-8-0 |
|---|---|

ஏஜண்டு: S. பொன்னுச்சாமி பிள்ளை,
133 திமபகொடா தெரு, பலாங்கொடை,

* * * (ε)

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி, S.I.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
## நகை
வியாபாரிகள்
= 0 =

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

விலாசம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponne, Jaffna on Friday March 13, 1953

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org